விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 28 புதன்கிழமை (11.04.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 113

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதன்மைத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## விபத்தையடுத்து தீப்பற்றியது பஸ்

## 25 பயணிகள் பலி;50 பேர் படுகாயம்

### இந்துருவ எனும் இடத்தில் சம்பவம்

(கொழும்பு)

காலி கொஸ்கொட பிரதான வீதியில் உள்ள இந்துருவ எனும் இடத்தில் நேற்றுக் காலை 6.15 மணியளவில் இடம் பெற்ற கெண்டைனர்-பயணிகள் பஸ் விபத்தில் 25 பயணிகள் தீயில் எரிந்து பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

மேலும் 50 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பியர் ஏற்றிச் சென்ற கெண்டைனரும் பயணிகளுடன் சென்ற இலங்கை போக்குவரத்துக்குச் சொந்தமான பஸ்ஸும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதாலேயே இக் கோர விபத்து இடம் பெற்றுள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)



### கலைப்பீட மாணவன் உட்பட இருவர் காணாமல் போயுள்ளதாக முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவன் உட்பட இருவர் காணாமற் போயுள்ளதாக யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவன் ஒருவர் நேற்று முன் தினம் காணாமற் போயுள்ளதாக உறவினர்களால் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாவலர் வீதி அரியாலையைச் சேர்ந்தவரான நாகேந்திரம் ராஜலக்சுமணன் (வயது 25) என்ற மாணவனே காணாமற் போனவராவார். இவர் நேற்று முன்தினம் பல்கலைக் கழகம் சென்றதாகவும் பின்னர் வீடு திரும்பவில்லையெனவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் குருசோ வீதி சுண்டுக்குளியைச் சேர்ந்த ஞானசீலன் ரவி (வயது 24) என்ற இளைஞன் காணாமற் போயுள்ளதாக உறவினர்களால் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (சு-3)

### இலங்கையைச் சேர்ந்த ஐவர் சென்னையில் வைத்து கைது

இலங்கையைச் சேர்ந்த 5 பேர் போலியான இத்தாலி பாஸ்போட்டை பயன்படுத்தி ஏர்-பிரான்ஸ் விமானம் மூலம் லண்டனுக்குச் செல்ல முற்பட்டபோது பயண ஆய்வு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டனர். இவர்களில் இரு பெண்களும் அடங்குவர்.

### கூட்டு கடல் ரோந்தில் ஈடுபட்டால் விடுதலைப்புலிகளுடன் போரிட நேரிடும்

### தமிழக கடற்படை அதிகாரி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இந்தியக் கடற்படையினர் தமது பகுதிகளிலேயே ரோந்தில் ஈடுபடுகின்றனர். ஆனால் இலங்கைக் கடற்படையினருடன் கூட்டு ரோந்தில் ஈடுபட்டால் விடுதலைப்புலிகளுடன் ஏற்படும் சண்டையில் நாங்களும் சம்பந்தப்பட வேண்டியிருக்கும் என இந்திய கடற்படையின் உயர் அதிகாரி கமாண்டர் வான் வால்டன் தெரிவித்தார்.

லண்டன் பி.பி.ஸி தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்தியா-இலங்கை இடையிலான கடற்பரப்பில் தமிழக மீனவர்கள் மீது அடிக்கடி நடைபெறும் துப்பாக்கிச் சூடு, மீனவர்கள் உயிரிழப்பு போன்றவை தமிழகத்தில் சர்ச்சையை ஏற் படுத்தியுள்ள நிலையில்,

இது போன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதில் சம்பந்தப்பட்ட மீனவர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது. தமிழக மீனவர்கள் கொல்லப்படும் சம்பவத்தைப் பொறுத்தவரை மீனவர்கள் புலர் கடல் எல்லைலயத் தாண்டி அந்தப் பக்கம் இலங்கை கடற்படை இருக்கும் பகுதிக்கு (04 ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கு-கிழக்கில் தொடரும் வன்முறைகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு கவலை

(கொழும்பு)

ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளது.

### ஓமந்தையூடான போக்குவரத்து நேற்றுக்காலை முதல் இடைநிறுத்தம்

(வவுனியா)

வவுனியா ஓமந்தை ஊடான வீதிப் போக்குவரத்து நேற்றுக் காலை முதல் மூடப்பட்டுள்

குச் செல்ல முற்பட்டபோது பயண ஆய்வு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டனர். இவர்களில் இரு பெண்களும் அடங்குவர்.

இந்த 5 பேரும் நள்ளிரவில் விமான நிலையத்திற்கு வந்தனர். சென்னையில் இருந்து அதிகாலை 2.30 மணிக்கு புறப்படும் ஏர்-பிரான்ஸ் விமானத்தில் ஏறத்திட்டமிட்டிருந்தனர் என்று விமான நிலைய அதிகாரிகள் கூறியுள்ளனர். (ச-5)

## போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு கவலை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் வன்முறைகள் தொடர்ந்து அதிகரித்துச் செல்வதாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு கவலை வெளியிட்டுள்ளது. எனினும் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட வான் தாக்குதல் நிலைமைகளில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த கண்காணிப்புக் குழுவின் சிரேஷ்ட அதிகாரியொருவர் மேலும் கூறுகையில், கட்டுநாயக்கா வான் படைத் தளத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டதையடுத்து நாம் அங்கு விசாரணைகளை (04 ஆம் பக்கம் பார்க்க)

(வவுனியா)

வவுனியா ஓமந்தை ஊடான வீதிப் போக்குவரத்து நேற்றுக் காலை முதல் மூடப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகள் நேற்று காலை மேற்கொண்ட மோட்டார் தாக்குதலையடுத்து இவ் வீதி தற்காலிகமாக மூடப்பட்டதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

இத் தாக்குதலில் ஒரு படைச் சிப்பாய் பலியானதுடன் மூன்று (04 ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா தலையிடக் கூடாது!

## ஜே.வி.பி.வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையில்பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு இந்தியா தனது முழுமையான ஆதரவினை வழங்க வேண்டும்.ஆனால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் செயற்பாட்டில் இந்தியா தலையிடக் கூடாது என்று ஜே.வி.பியின் வெளிவிவகாரங்களுக்கான செயலாளரும் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் அண்மையில் அமெரிக்காவுடன் செய்து கொண்ட பாதுகாப்பு தொடர்பான உடன்படிக்கையின் விபரங்களை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும். அரசாங்கம் அமெரிக்காவுடன் பாதுகாப்பு விடயத்தில் உடன்படிக்கையினை செய்து கொண்டமையை இந்திய ஒருபோதும் விரும்பாது என்றும் அவர் கூறினார்.

இலங்கை எப்போதும் இந்தியாவை பகைத்துக்கொள்ளக்கூடாது என்பதனை எமதுகட்சிஏற்றுக்கொள்கிறது. காரணம் பிராந்தியத்தில் பலமான (04 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கான இந்தியத் தூதரக வாகனம் ஆயுததாரிகளால் கடத்தல்

(கொழும்பு)

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்குச் சொந்தமான இராஜதந்திரிகள் பயணிக்கும் வாகனமொன்று நேற்று முன்தினம் தலைநகர் கொழும்பின் புறநகரான சீதுவ பகுதியில் வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகளினால் துப்பாக்கி முனையில் (04 ஆம் பக்கம் பார்க்க)

## 14 ஆவது சார்க் கார்களின் பவனி நேற்று கொழும்பில் ஆரம்பம்

(கொழும்பு)

14 ஆவது சார்க் உச்சி மாநாட்டை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட சார்க் கார் பவனி இலங்கையில் நேற்றுக் காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இலங்கையின் கரையோரப் பகுதிகள் மற்றும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களை உள்ளடக்கியதாக இக் கார் பவனி 900 கிலோ மீற்றர் தூரத்தை இம் மாதம் 12 ஆம் திகதி வரை (04 ஆம் பக்கம் பார்க்க)

மிதிவெடி பிரதேசம் என அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்களைத் தவிர்த்து நடப்போம்.

unicef

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007

## அயர்லாந்தை 129 ஓட்டங்களால் நியூசிலாந்து அணி அபார வெற்றி

(ஜமேக்கா)

அயர்லாந்தை 129 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது நியூசிலாந்து அணி. மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வரும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் குஜானாவில் நடைபெற்ற சூப்பர்-8 ஆட்டத்தில் நியூசிலாந்து - அயர்லாந்து அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணித் தலைவர் ஸ்ரீபன் பிளமிங் முதலில் துடுப்பாட்டத்தைத் தீர்மானித்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களையிழந்து 263 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பீற்றர் புல்டன் 83 ஓட்டங்களையும் மக்குலம் 47 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் அயர்லாந்து அணி சார்பாக ஸ்மித், மக்கலன் வைற் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 264 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி, டானியல் விக்டோறியின் சிறப்பான சுழலில் 37.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 134 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 129 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதில் கெவின் ஓபிறைன் 49 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக சுழல் பந்து வீச்சாளர் டானியல் விக்டோறி 4 விக்கெட்டுக்களையும் பொன்ட், பட்டேல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக நியூசிலாந்து அணியின் புல்டன் தெரிவானார். இவ் வெற்றியுடன் நியூசிலாந்து அணி ஓட்ட விகித சராசரியின்படி சூப்பர்-8 ஆட்டத்தில் முதலாவது இடத்திற்கு முன்னேறியதுடன் அவுஸ்திரேலியா 2-வது இடத்திலும் இலங்கை 3-வது இடத்திலும் உள்ளன. (ச-5)


அனுசரணை:-



குறைந்த கட்டுப் பணம்,
உயர்ந்த பங்குலாபம், சிறந்த சேவை,
உன்னத வாழ்வும் நாடுங்கள்

SRI LANKA LIFE
வாழ்க்கைக்கு மதிநுட்பமான முதலீடு
ஸ்ரீ லங்கா இன்ஷூவரன்ஸிடமிருந்து
Sri Lanka Insurance





NEW YEAR SALE

சண்டீவி, ஜெயா டீவி, பொதிகை, சண் நியூஸ் DD ஸ்போட்ஸ் உட்பட 40 சனல்களைக் கண்டு களிக்கக் கூடிய Ku band Dish அன்ரனா சிஸ்டம் மற்றும் கேபிள் ரீவி உபகரணங்கள் மலிவான விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

Ku band Full System Rs.10,000/= இல் இருந்து...

மேலதிக விபரங்களுக்கு:-
சட்ஸ் டெக்,
182, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்.
(குளப்பிட்டி சேச் அருகில்)
Phone:- 021 222 5908 / 077 7710785

(819)


## தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு உரிய திகதியில் சமுகமளிக்க அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

வவுனியா, மட்டக்களப்பு மற்றும் தர்க்காநகர் தேசியக் கல்வியியற் கல்லூரிக்குத் தெரிவான யாழ்ப்பாண மாணவர்களை உரிய திகதியில் விரிவுரைகளுக்குச் சமுகமளிக்குமாறு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கே. பெர்ணாட் அறிவித்துள்ளார்.

தெரிவான மாணவர்கள் தமது பயணம் தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி யோகநாதனிடம் உறுதிப்படுத்தல் கடிதத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என அவர் அறிவித்துள்ளார்.

உறுதிப்படுத்தல் கடிதம் பெறச் செல்லும் போது அனுமதிக் கடிதங்கள் கிடைக்கப் பெறாதவர்கள் வவுனியா கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதியின் கையொப்பம் இடப்பட்ட மாணவர்களின் விபரப் பட்டியலை வலம்புரிக் காரியாலயத்தில் பெற்று அதன் போட்டோப் பிரதியைக் கொண்டு செல்லுமாறும் அவர் அறிவித்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட தேசியக் கல்வியியற் கல்லூரிகளில் எதிர்வரும் 21 ஆம் திகதி பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மாணவர் கௌரவிப்பும் இலவச கண்ணாடி வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் வல்வையில் 2006 ஆம் ஆண்டு 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் விழாவும் 23-வது இலவச கண்ணாடி வழங்கும் வசந்த விழாவும் எதிர் வரும் 14 ஆம் திகதி காலை 9 மணிக்கு வைத்தியசாலை வளாகத்தில் இடம் பெறவுள்ளது.

இவ்விழாவில் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கமும் வைத்தியசாலை அபிவிருத்திச் சபைத் தலைவர் டாக்டர் க.ம.பிலேறும் பெருமாளும் தலைமை தாங்கவுள்ளனர். (கு)

## மக்கள் வங்கியின் புதுவருட கொடுக்கல் வாங்கல்கள்

(யாழ்ப்பாணம்)

புத்தாண்டு கொடுக்கல் வாங்கல்களுக்காக மக்கள் வங்கியின் அனைத்துக் கிளைகளும் சேவை நிலையங்களும் தமிழ் புத்தாண்டு தினமாகிய 14 ஆம் திகதிஅன்று காலை 11 மணியிலிருந்து திறந்து இருக்கும்.

அன்றைய தினம் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் கைவிசேஷமாக பத்து ரூபா நாணயக் குற்றி வழங்கப்படுவதுடன் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான புதுவருட சேமிப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளும் ஒவ்வொருவருக்கும் ரூபா 500 பெறுமதியான அன்பளிப்புச் சீட்டும் பரிசாக வழங்கப்படும் என வட வலய உதவிப் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். (ச)


### மணமகள் தேவை

யாழ்.இந்து விஸ்வகுலம் (பொற்கொல்லர்) 1971 சுவாதி, துலாம்ராசி, 12ல் செவ்வாய், 26 1/4 கிரகபாவம், 6 அடி உயரம், சிவந்த மேனி, G.C.E. A/L. நகைக் கடை உரிமையாளர் மணமகனுக்கு படித்த அழகான மணப்பெண் தேவை.

தொடர்புக்கு- சிவாலயா சர்வதேச திருமண சேவை, 389C, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி (பூங்கனிச் சோலைக்கு அருகில்).

T.P:- 077 5834982 (c-699)



### தவறிவிட்டது

H.K.BENZ என்ற எழுத்துப் பொறிக்கப்பட்ட நாவற்பழ நிற பிரயாணிகள் பை ஒன்று கடந்த 8 ஆம் திகதி தெல்லிப்பழையில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் 021226 3509 என்ற தொலைபேசி இலக்கத்துடன் அல்லது நெடியகாடு, வல்வெட்டித்துறை என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வே.முருகவேல்.

(816)



### ஜெஸ்வின் & பருத்தித்துறை பங்கு கணினிப் பயிற்சியகம்

பங்குப் பணிமனை, புனித தோமையார் ஆலயம், பருத்தித்துறை.

ஜெஸ்வின் & பருத்தித்துறை பங்கு கணினிப் பயிற்சியகத்தின் ஆதரவில் அரச தொழில் பயிற்சி அதிகார சபையும்,



யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் தொழில் நிகழ்ச்சித் திட்டத்தினரும் இணைந்து நடாத்தும்,

தொழில் பயிற்சி வழிகாட்டல் கருத்தரங்கும் கணினிப் பயிற்சி முடித்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கலும்

காலம் :- 12.04.2007 வியாழக்கிழமை 9.00 மணிக்கு
இடம் :- சென்.தோமஸ் றோ.க.மகளிர் பாடசாலை, பருத்தித்துறை.

தலைவர்:- பயஸ் இருதயதாஸ் அடிகளார், பங்குத் தந்தை
பிரதம விருந்தினர் :- திரு.ஆர்.வரதீஸ்வரன் அவர்கள்
(பிரதேச செயலர், பருத்தித்துறை)
தொழில் பயிற்சிக்கான கருத்தரங்கு
திரு.இரா.அகிலன் அவர்கள்
(மாவட்ட இணைப்பாளர்,அரச தொழில்பயிற்சி அதிகார சபை)
திரு.ஏ.சபேசன் அவர்கள்
(தொழில்நுட்ப உத்தியோகஸ்தர், தொழில்நுட்பக்கல்லூரி, யாழ்ப்பாணம்)

இந் நிகழ்வில் இளைஞர்கள், யுவதிகள், மாணவர்கள், வேலையற்றோர் அனைவரும் இவ் முக்கிய நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன், அன்றைய தினம் எமது நிறுவனத்தினூடாக ஆரம்பிக்கப்பட இருக்கும் கணினிப் பயிற்சி நெறிகள் மற்றும் தட்டச்சு-சுருக்கெழுத்து (தமிழ், ஆங்கிலம்), றோணியோ இயந்திரப் பயிற்சி, கணினித் திருத்துநர் பயிற்சி ஆகிய பயிற்சிகளில் இணைந்து 3 மாதப் பயிற்சியினை நிறைவு செய்பவர்களுக்கு விசேட சலுகைகளும், தொழில் வாய்ப்புக்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். கிராமசேவகரின் உறுதிப்படுத்தலுடன் வருமிடத்து திட்ட அடிப்படையில் இலவசப் பயிற்சிகள். (C-698)



### ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம்

IPDT

Institution of Professional Development for Teachers

### கற்பித்தல் சாதன ஆக்கத்திறன் டிப்ளோமா

ஆசிரியத் தொழிலிலும், சுய தொழிலிலும் ஆர்வமுள்ளோர், முன்பள்ளி - ஆரம்பக்கல்வி ஆசிரியர், ஏனைய ஆசிரியர்களின் வாண்மையை அரச சார்பற்ற ரீதியில் விருத்தி செய்யவும், கைவினைத் தேர்ச்சியினூடாக கற்பித்தல் - கற்றல் - அழகுசாதனங்களை உலக தரத்திற்கு ஏற்ப உருவாக்கவும் இப்பாடநெறி வழிகாட்டும்.

மேலும்,

❖ பிள்ளைகளின் உளவியல், சமூகவியல், கல்வியியல் தேர்ச்சிகளை எவ்வாறு வழிப்படுத்துவது என்பது பற்றிய விளக்கங்கள் - செய்முறைகள்.

❖ வீசி எறியும் பொருள்கள், செலவற்ற இயற்கைப் பொருள்கள், சிரட்டை, சிப்பி, சோகி, பனம் விதை, மட்டைகள், ஓலை, உறிஞ்சி (ஸ்ரோ) என்பவற்றைக் கொண்டு கற்பித்தல் - அழகுசாதனங்கள் செய்தல், பட்டம், காற்றாடி, பம்பரம், முகமூடி, பொம்மைகள் செய்தல்.

❖ அலங்கார உபகரணங்கள், பூக்கள், சுவர் அலங்காரம், மைக்ரம், வெளிச்சக்கூடுகள் செய்தல், களிமண், கிளே, செதுக்கல் வேலைகள், நீத்துப்பெட்டி, பெட்டி, பாய் இழைத்தல், மாலை கட்டுதல், கோலம் போடுதல், தோரணம், வூல்பான், பொக்கே, நாகசடம், கால்மிதி மற்றும் புத்தெலிப்புக் கருவிகள் செய்தல்.

❖ சிறுவர் சங்கீதம், சிறுவர் நடனம், சிறுவர் நாடகம், விளையாட்டுக்கள், பொம்மலாட்டம், இசைவும் அசைவும், அரங்க விளையாட்டுக்கள், எழுத்துருவாக்கங்கள்.

❖ பல்வேறு பாடங்களுக்கு ஏற்ற கற்றல் - கற்பித்தல் முறைகள், வெளிக்கள கல்விச்சுற்றுலா, செயற்திட்டம், செயல்நிலை ஆய்வுகள், கற்பித்தல் பயிற்சிப் பிரயோகம், கணனிப் பயிற்சி

என ஆசிரியத்தின் பரந்துபட்ட விடயங்களை உள்ளடக்கிய ஒருவருட டிப்ளோமா பாடநெறியைப் பின்பற்ற விரும்புவோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை நிரப்பி 20.04.2007 ஆம் திகதிக்கு முன்; *பதிவாளர், ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம்,(ஆனந்தா அச்சகம்), 226, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு சாதாரண தபாலில் அனுப்பி வைக்கவும். பயில்வுகள் சனி,ஞாயிறு, பாடசாலை விடுமுறை நாள்களில் நடைபெறும்.

Consultant
Mr.B.Thanabalan
B.A.(Cey) PGDE (merit), Dip.in Psy (1st Class),
Dip.in Guidance and Counselling, M.phil. in Education

Co-ordinator
Mr.T.Sivakumar
Dip. in Teaching B.A., Dip. in Psy 1st Class
T.P.077 6184250

(c-695)

பிறரிடத்து அன்பும், சகிப்புத் தன்மையும் காட்ட வேண்டுமேயன்றி பழிவாங்கும் போக்குக் கூடாது.

–டாக்டர் இராதாகிருஷ்ணன்

## வலம்புரி

# நீதி அமைச்சரின் நியாயமான கருத்து

இனப்பிரச்சினைக்கு சகல இனமக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வை முன்வைக்க வேண்டும். இதற்கு தற்போது நடைமுறையிலிருக்கும் போர் நிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்த வேண்டும்.

இவ்வாறு நீதி மற்றும் நீதி மறுசீரமைப்பு அமைச்சர் டிலான் பெரேரா கூறியுள்ளார். போர் நிறுத்த உடன்படிக்கை இல்லாமல் பேச்சுவார்த்தையை நடத்த முடியாதென நீதி அமைச்சர் டிலான் பெரேரா கூறுவதிலிருந்து அவர் யதார்த்த நிலையை உணர்ந்தவர் என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

பொதுவாக யுத்தம் ஒருபுறமும், மறுபுறத்தில் சமாதானப் பேச்சுவார்த்தையும் நடத்த வேண்டும் எனக் கூறும் அமைச்சர்களும், அரசியல்வாதிகளும் இருக்கவே செய்கின்றனர்.

ஒருபுறத்தில் யுத்தமும், மறுபுறத்தில் பேச்சுவார்த்தையும் ஏக காலத்தில் நடைபெற முடியாதவை. யுத்தம் நடைபெறும் போது அதனது உடனடித் தாக்கம் சமாதானத்திலேயே எதிரொலிக்கும். இது யதார்த்தமானது. நிலைமை இதுவாக இருக்கும் போது யுத்தமும் சமாதானமும் ஒரே நேரத்தில் நடைபெற முடியாதென்பதையே நீதி அமைச்சர் டிலான் பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தமும் சமாதானப் பேச்சுவார்த்தையும் ஏக காலத்தில் நடத்தப்பட வேண்டுமென நீதி அமைச்சர் கூறுவாராயின், அவர் அந்த அமைச்சுக்குப் பொருத்தமானவர் அல்ல என்ற முடிபுக்கு நாம் வர முடியும்.

அவ்வகையில் டிலான் பெரேரா நீதிஅமைச்சுக்குப் பொருத்தமானவர் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதே. அவ்வகையில் இலங்கையின் கௌரவம் ஓரளவேனும் காப்பாற்றப்பட்டுள்ளது எனலாம்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை தேவையானதா? இல்லையா? என்பது குறித்து சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டுமென இந் நாட்டின் ஜனாதிபதி கூறுகின்றபோது அந்த ஜனாதிபதியின் கீழுள்ள நீதி அமைச்சர், போர் நிறுத்த உடன்படிக்கையில்லாமல் சமாதானப் பேச்சுவார்த்தையை நகர்த்த முடியாதெனத் தெளிவாகக் கூறியிருப்பது அவரின் அறிவையும், துணிச்சலையும், யதார்த்த பூர்வமான சிந்தனையையும் எடுத்துக் காட்டுவதாக இருக்கின்றது.

எந்த வல்லரசையும் இலங்கை இனப்பிரச்சினையில் தலையிடுவதற்கு அனுமதிக்க மாட்டோம் என பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கோஷம் போடும் போது நீதி அமைச்சர் டிலான் பெரேரா இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா நேரடியாகத் தலையிட வேண்டிய காலம் வந்து விட்டது எனக் கூறுகின்றார்.

சுமார் ஆறு கோடி தமிழர்கள் அங்கு இருப்பதனால் இலங்கை விடயத்தில் இந்தியா பொறுப்புடன் நடந்து கொள்ளுமெனத் தான் நம்புவதாகவும் அமைச்சர் டிலான் கூறியிருப்பது இலங்கை அரசியல் புலத்தில் முக்கிய அமைச்சர் ஒருவர் நிலைமையைப் புரிந்து கொண்டுள்ளமை ஓரளவு திருப்தியைத் தருவதாகவுள்ளது.

# குஞ்சுகள் எடுத்து வரப்படாமையால் கோழிப் பண்ணையாளர்கள் பாதிப்பு

யாழ்.மாவட்டத்திற்கு கோழிக் குஞ்சுகளை கொழும்பிலிருந்து கொண்டு வருவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் இதுவரை பயன் அளிக்கவில்லை என கோழி வளர்ப்போர் மற்றும் பண்ணையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஏ–9 பாதை மூடப்பட்டதையடுத்து எந்தவகையான கோழிக் குஞ்சு இனங்களும் இதுவரை யாழ்.மாவட்டத்திற்கு எடுத்து வரப்படவில்லை. இறைச்சிக்கு வளர்க்கப்படும் புறொயிலர் கோழிக் குஞ்சுகள் இன்மையால் கோழி இறைச்சியின் விலை ஆயிரம் ரூபாவுக்கு மேல் அதிகரித்துள்ளது.

அதுவும் நாட்டுக் கோழிகளும் பண்ணைகளில் வளர்க்கப்பட்டு முட்டை இட்டபின்னர் கழிக்கப்படும் கோழிகளுமே இறைச்சிக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் விரும்பிய இடத்தில் விரும்பிய நேரத்தில் கோழி இறைச்சியைப் பெற்றுக் கொள்ள முடியாது.

நகர்ப்புறச் சந்தைகளில் சிரமப்பட்டே மிகக் கூடிய விலைக்கு கொள்வனவு செய்ய வேண்டும். ஏ–9 பாதை மூடப்பட்டு 8 மாதங்கள் நிறைவடையும் நிலையிலும் யாழ்.மாவட்டத்திற்கு கொழும்பிலிருந்து கோழிக் குஞ்சுகள் எடுத்துவரப்படாத நிலையில் கோழி வளர்ப்போர்,பண்ணையாளர்கள் தமது தொழில் முயற்சியை முற்றாகக் கைவிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

கோழிக் குஞ்சு இனங்களை யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வருவதற்கு வர்த்தக ரீதியில் சிலர் முயற்சி செய்த போதிலும் அதனை கொழும்பிலிருந்து கொண்டு வருவதற்கான விமான மூலமான பிரயாண வசதி வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை எனக் கூறப்படுகின்றது.

உரிய வேளையில் கோழிக் குஞ்சுகள் யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வருவதில் மேலும் தாமதம் ஏற்படுமானால் மேலும் பலர் தொழில் முயற்சியைக் கைவிட வேண்டி ஏற்படுவதுடன் பொருத்தமான விலங்குப் புரத உணவுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்படுவதையும் தவிர்க்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டது. (ச–5)

# அமெரிக்கப் பிரஜை ஒருவரே இந்த நாட்டை நிர்வகிக்கின்றார்

## ஐக்கிய தேசியக் கட்சி சாடல்

கட்டுநாயக்கா விமானப் படைத் தளம் மீது புலிகள் தாக்குதல் நட த்தியமைக்குப் பொறுப்பேற்று உடனடியாகப் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பதவி விலகி மீண்டும் அமெரிக்காவுக்கே சென்று விட வேண்டும்.

அதேவேளை நாட்டின் பாதுகாப்பு விடயத்தில் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்ட பாதுகாப்பு செயலாளருக்கு எதிராக அரசாங்கமும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டு என்று ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜனநாயக ரீதியில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை எதிர்வரும் மே மாதம் முதல் நாங்கள் மேற்கொள்வோம். அதற்குத் தேவையான ஒத்துழைப்பை நாட்டு மக்கள் வழங்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது;

அரசாங்க அமைச்சர்கள் பொறுப்பற்ற முறையில் செயற்பட்டு வருகின்றனர். பொறுப்பை தட்டிக்கழித்து செயற்படும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை பாதுகாப்பதற்கு அமைச்சர்கள் முயற்சிக்கின்றனர்.

கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஆதரவாக கருத்து தெரிவிக்காவிட்டால் அமைச்சர்களால் அரசாங்கத்தில் தொடர்ந்து இருக்க முடியாது. இதனை அமைச்சர்களே எம்மிடம் தெரிவித்துள்ளனர்.

இராணுவத்தினரின் மன நிலை பாதிக்கின்ற வகையில் ஐக்கிய தேசியக்கட்சி கருத்துத் தெரிவிப்பதாக கூறப்படுகின்றது. ஆனால் இராணுவத்தில் பல பிரிவுகளை உருவாக்கியதும் அவற்றைப் பலப்படுத்தியதும் ஐக்கிய தேசியக் கட்சி என்பதனை யாரும் மறக்கக் கூடாது.

இன்று அமெரிக்க பிரஜை ஒருவர் இந்த நாட்டை நிர்வகித்துக் கொண்டிருக்கின்றார். ஜனாதிபதி தனது சகோதரர்களை பதவியில் அமர்த்துவதற்காக மக்கள் வாக்களிக்கவில்லை. கடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் ரணில் விக்கிரமசிங்க தனது சகோதரர் ஒருவரை ஏதாவது ஒரு பதவியில் அமர்த்தியிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை நாங்கள் கூற வேண்டிய அவசியமில்லை.

ஜே.வி.பியினரே இந்த அரசாங்கத்தை உருவாக்கினர். தற்போது அவர்களும் அரசாங்கத்தை விமர்சிக்கின்றனர். ஆனால் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்காக எந்தக் கட்சியுடனும் பேச்சுநடத்த ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருக்கின்றது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி அதிகாரப் பகிர்வின் அடிப்படையில் தீர்வு யோசனையை முன்வைக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. முடியுமானால் தீர்வு யோசனையை முன்வைக்குமாறு அரசாங்கத்துக்கு சவால் விடுகின்றோம். அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெலஉறுமய இதற்கு ஒருபோதும் இடமளிக்காது என்றார். (ச–5)

# கடுமையான உணவுப் பற்றாக்குறையினால் மட்டு. இடம்பெயர்ந்த மக்கள் அவதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இடம்பெயர்ந்துள்ள ஒரு லட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் அங்கு பெய்துவரும் கடும் மழையினால் பாதிக்கப்பட்டுள்ள அதேசமயம் கடுமையான உணவுப்பற்றாக்குறைக்கும் முகம் கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எந்தவிதமான உணவு விநியோகங்களும் தங்களுக்கு வழங்கப்படவில்லையென தெரிவித்துள்ளனர். மூன்று வேளைகளும் உணவு உட்கொள்ள வேண்டிய மக்கள் 100 தொடக்கம் 200 கிராம்அரிசியுடன் ஒரு நாளைக் கழிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பால்மா வகைகளின் பற்றாக்குறையினால் சிறார்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். சத்துருக்கொண்டானிலுள்ள ஒரு முகாமில் மட்டும் 750ற்கும் மேற்பட்ட சிறார்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அங்கு தற்போதும் எறிகணைவீச்சுச் சத்தங்கள் கேட்ட வண்ணமேயுள்ளன. அரிசி, பருப்பு மற்றும் உலர் உணவுப் பொருள்களை உலக உணவுத் திட்டம் பல முகாம்களுக்கு விநியோகித்து வருகின்றது.

ஆனால் மரக்கறி மற்றும் ஏனைய சத்துணவு வகைகளுக்கும் பற்றாக்குறை நிலவுகிறது என மக்கள் தெரிவிக்கின்றனர். அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக சத்துருக்கொண்டானிலுள்ள ஆயிரத்து 500 குடும்பங்கள் தங்கியுள்ள 5 முகாம்களுக்குப் பொறுப்பான கிராமசேவையாளர் கே.தங்கவடிவேலு தெரிவித்ததாவது,

இங்குள்ள முகாம்களுக்கான புதிய உணவு விநியோகங்கள் மேற்கொள்ளப்படவில்லை. உலக உணவுத் திட்டமே தற்போது விநியோகங்களை மேற்கொண்டு வருகின்றது. எனினும் அது இந்த மாத இறுதிவரையுமே போதுமானது. நாம் எங்களான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

ஆனால் உதவிகள் இல்லாத போது எம்மால் சிறியளவிலான பணிகளையே மேற்கொள்ள முடியும். மிகவும் தரம் குறைந்த அரிசியே வழங்கப்பட்டு வருகின்றது. அரசாங்கத்தினால் பதிவுகள் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றன.

உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களாலேயே ஏனைய 99 வீதமான பணிகள் நிறைவேற்றப்படுகின்றன என்றார் அவர். (ச)

# கற்பூரம், சாம்பிராணி பெற்றுக் கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

புதுவருடத்தைமுன்னிட்டு ஆலயங்களுக்குத் தேவையான கற்பூரம், சாம்பிராணி ஆகியன இன்று காலை 9மணியளவில் கந்தர்மடம் இந்து சமயப் பேரவை தலைமை அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

பணத்துக்கு வழங்கப்படும்இப்பொருள்களை ஆலய உரிமையாளர்கள் மற்றும் ஆலய பரிபாலனசபையினர் உறுதிப்படுத்தப்படுமிடத்து அவற்றை பெற்றுக் கொள்ளலாம் என இந்து சமயப் பேரவையினர் அறிவித்துள்ளனர். (ச–3)

# இந்து குருமார்களுக்கு விசேட அடையாள அட்டை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலகத்தினால் இந்து மதகுருமார்களுக்கான விசேட அடையாள அட்டை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பிரதம குருமார்கள், இந்து உதவிக் குருமார்கள் விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தில் பெற்று முத்திரை அளவிலான புகைப்படங்களுடன் விண்ணப்பிக்குமாறு யாழ்ப்பாணப் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ச)

# முன்பள்ளிப் பாலர்களின் பேச்சுத் திறன் விழா

(யாழ்ப்பாணம்)

ஆறுகால்மடம் அறிவொளி முன்பள்ளி பாலர்களின் 2–வது பேச்சுத் திறன் விழா இன்று காலை 10 மணிக்கு அறிவொளி முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளி ஆசிரியை செல்வி சி.சிவகௌரி தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார். சிறப்பு விருந்தினராக முன்பள்ளி மேற்பார்வையாளர் செல்வி சி.கார்த்திகாயினி கலந்து கொள்கின்றார். (ச)

# 4 ஆயிரம் தபால் பொதிகள் திருகோணமலையில் தேக்கம்

(திருகோணமலை)

திருகோணமலையில் யாழ்.குடாநாட்டிற்கான 4 ஆயிரத்து 431 தபால் பொதிகள் ஒரு மாதத்திற்கு மேலாக தேங்கிக்கிடப்பதாக திருகோணமலை பிரதம தபால் அதிபர் விவேகானந்தன் தெரிவித்தார்.

இப் பொதிகள் ஓரிரு தினங்களில் கப்பல் மூலம் குடாநாட்டிற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக அவர் கூறினார்.

இவற்றில் அனேகமானவை பொதிகள் அடங்கியபைகள் உள்ளதாகவும், இவற்றினை இந்துருவலி கப்பலில் அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ஒன்றை விட்ட நாட்கள் பிரயாணிகள் கப்பலான கிறீன் ஓசன் என்ற கப்பல் மூலம் சாதாரணமாக 35 தபால் பைகள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அடைமழை பெய்து கொண்டிருப்பதனால் பழைய கட்டடத்தில் சிறிய ஒழுக்கு இருந்ததாலும் இப் பொதிகள் பாதுகாப்பாக வைத்துள்ளதுடன் அவற்றிற்கு பெரிய அளவில் சேதம் எதுவும் ஏற்படவில்லை எனவும் திருகோணமலை பிரதம தபால் அதிபர் விவேகானந்தன் கூறினார். (ச-3)

## 14 ஆவது சார்க்...

கடந்து செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நேற்றுக் காலை காலி வீதியில் அமைந்துள்ள தாஜ் சமுத்திரா ஹோட்டலுக்கு அருகில் இருந்து ஆரம்பமான இம் மோட்டார் கார் பவனி இலங்கையின் தென்பகுதி கடற் கரையோரமாக திஸ்ஸமகா ராமவைச் சென்றடையும்.

பின்னர் அங்கிருந்து நாவலப் பிட்டி மற்றும் கம்பளையூடாக கண்டிக்குச் சென்றடையும். அதைத் தொடர்ந்து கொழும்பினூடாக குரு நாகலுக்கும் அநுராதபுரத்துக்கும் சென்றடையும். இந்த சார்க் கார் பவனி மார்ச் 15 ஆம் திகதி பங்களாதேஷில் முதலில் ஆரம்பமானது. இதில் 30 வாகனங்கள் பங்குகொண்டன. இம் மாதம் 3 ஆம் திகதி இந்தியாவில் நடைபெற்ற கார் பவனியில் எட்டு சார்க் நாடுகள் பங்குபற்றின.

இந்தியா, பங்களாதேஷ், பூட் டான்; நேபாளம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இக் கார் பவனி ஏற்கனவே நடைபெற்றுள்ளது. இலங்கையில் இக் கார் பவனிக்காக கடந்த 8 ஆம் திகதி 28 வாகனங்கள் கொழும்பை வந்தடைந்தன. சார்க் நாடுகளுக்கிடையில் நல்லுறவு களைப் பலப்படுத்துதல் மற்றும் அமைதி சமாதானத்தை ஏற்படுத்துதல் ஆகிய நோக் கிலேயே இக் கார் பவனி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## இலங்கைக்கான இந்தியத்...

கடத்தப்பட்டுள்ளது.

இந்தக் வாகனக் கடத்தல் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட இந்திய தூதராலயத்தின் மூத்த இராஜதந்திரி ஒருவர் நேற்று முன்தினமிரவு தமது தூதரகத்தில் சாரதியாகப் பணிபுரிந்துவரும் விஸ்வநாதன், இராஜதந்திரிகள் பயணிக்கும் வாகனமொன்றில் கொழும்பிலிருந்து கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்குச் சென்று கொண்டிருந்த சமயம் இனந்தெரியாத துப்பாக்கி நபர்களினால் கடத்தப்பட்டார். பின்னர் நேற்றுக் காலை வாகனச் சாரதி பலமாகத் தாக்கப்பட்ட பின் விடுவிக்கப்பட்டுள்ளார். இது குறித்து பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. பொலிஸார் ஏற்கனவே வாகனச் சாரதியின் வாக்குமூலத்தினைப் பதிவு செய்துள்ளனர்.

பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு குற்றவாளிகளையும் ;வாகனத்தினையும் கண்டுபிடிப்பார்கள் எனத்தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த வானக்கடத்தல் தொடர்பாக விசாரணைகளை உடனடியாக முடுக்கிவிடும்படி பொலிஸ் மா அதிபர் விக்டர் பெரேராவிற்கு விசேட உத்தரவினைப் பிறப்பித்திருப்பதாக ஜனாதிபதி செயல வட்டாரங்கள் தெரிவித்தன.

2005 ஆம் ஆண்டு இந்தியப் பிரதித்தூதுவர் எ.மாணிக்கத்தின் வாகனம் அபேபுஸ்ஸ ஓய்வு இல்லத்தில் துப்பாக்கி முனையில் கடத்திச் செல்லப்பட்டது. இன்னும் அவ் வாகனம் மீட்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## ஓமந்தைநடான...

பேர் காயமடைந்துள்ளனர். சம்பவத்தையடுத்து விடுதலைப்புலி களின் பகுதியை நோக்கி படையினரும் எறி கணைத் தாக்குதல்களை மேற்கொண்டதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

இத் தாக்குதல் சம்பவம் குறித்து சேதவிபரங்கள் வெளியாகவில்லை. இம் மோதல் சம்பவங்களினால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் கடமைகளுக்கு சமுகமளிக்காமை காரணமாகவே ஏ-9 வீதி போக்குவரத்துக்கு தடைப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-3,5)

## இனப்பிரச்சினை விடயத்தில்...

நாடாக இருக்கும் இந்தி யாவிடம் அரசாங்கம் எப்போதும் நம்பிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும். அண்மையில் கட்டுநாயக்கா விமானப் படைத்தளத்தில் புலிகள் விமானத் தாக்குதலை மேற்கொண்ட போது அரசாங்கம் இந்தியாவை குறைகூறுகின்றது. காரணம் இந்தியா வழங்கியுள்ள ராடர் கருவி பழைமையானது என்று கூறப்பட் டது. ஆனால் அதனை இந்தியா மறுத்துவிட்டது.

இலங்கை விமானப்படையின் கவனயீனம் காரணமாகவே புலி களின் விமானத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது என்பது தெளிவாகின்றது. இதனை இந்தியாவும் வலியுறுத்தியிருந்தது. அரசாங்கம் அண்மையில் அமெரிக்காவுடன் பாதுகாப்பு தொடர்பான உடன்படிக்கையொன்றை செய்து கொண்டது.

அந்த உடன்படிக்கை தொடர் பாக நாட்டு மக்களுக்கு இதுவரை அறிவுறுத்தவில்லை. இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. அரசாங்கம் எந்தவொரு நாட்டுட னாவது பாதுகாப்பு உடன்படிக்கை யை செய்து கொண்டால் அது தொடர்பாக நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும். இது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்றார்.

அரசாங்கம் பயங்கரவாததத்தை ஒழிக்கும் செயற்பாட்டுக்கு இந்தி யாவிடம் முழுமையான உதவியை பெறவேண்டும். இலங்கை அர சாங்கத்துக்கு இந்தியா உதவ வேண்டும் என்பதே ஜே.வி.பியினதும் கோரிக்கையாகும்.

ஆனால் இலங்கையின் இனப் பிரச்சினையை தீர்க்கும் செயற்பாட் டில் இந்தியா தலையிடாமல் இருப் பதே சிறந்ததாகும். இனப்பிரச்சி னைக்கு தீர்வாக இந்தியாவில் உள்ள அதிகாரப்பகிர்வு முறையை இலங்கையில் அமுல்படுத்துமாறு இந்தியா அழுத்தம் கொடுக்கக் கூடாது.

காரணம் இலங்கை இறைமை உள்ள நாடு. இங்குள்ள பிரச்சினை யை தீர்ப்பதற்கு எங்களால் முடியும். சர்வதேச ரீதியில் எந்த வொரு நாடும் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் தலையிடக்கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும். எனவே இந்தியா பயங்கரவாதத்தை ஒழிக்கும் செயற்பாட்டிற்கு உதவுவதுடன் தனது பங்களிப்பை நிறுத்திக்கொள்ளவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-5)

## வடக்கு-கிழக்கில் தொடரும்...

மேற்கொள்வதற்கு செல்ல முயன்றோம். எனினும் எமக்கு இதுவரை அதற்கான அனுமதி கிடைக்கவில்லை.

யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் வன்முறைகள் நாளாந்தம் அதிகரித்துச் செல்கின்றன. இங்கு முன்னரங்க நிலைகளில் இரு தரப்புக்குமிடையில் பரஸ்பரம் கடும் ஷெல் தாக்குதல்கள் இடம் பெறுகின்றன. இப் பகுதிகளில் படுகொலைகளும் கிளைமோர் தாக்குதல்களும் இடம்பெறுவது நாளாந்த நிகழ்வாகிவிட்டன.. இத் தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்கள் இலக்காவது துரதிஷ்டவசமானதோடு, மிகவும் கவலைக்குரியதாகும். பல தாக்குதல்களில் சிக்குண்டு பொது மக்கள் உயிரிழந்த, காயமடைந்த பல சம்பவங்கள் இடம் பெற் றுள்ளன.

மோதல்கள் காரணமாக இடம் பெயர்ந்தோரின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கின்றது. இடம் பெயர்ந்த மக்கள் பாரிய இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என்றார் அவர். (ச-5)

## கூட்டு கடல் ரோந்தில்...

செல்கின்றனர்.

விடுதலைப்புலிகளுக்கும் இலங்கைக் கடற்படைக்கும் இடையில் நடக்கும் மோதலில் இவர்கள் இடையில் மாட்டிக் கொள்கின்றார்கள். நாங்கள் மீனவர்களிடம் சர்வதேச எல்லையைத் தாண்டிச் செல்லாதீர்கள் என்று கூறுகின்றோம். அங்கு நடக்கும் மோதலில் சிக்கி உயிரிழக்க நேரிடும் என்று கூறுகிறோம்.

ஆனால் ;இலங்கைப் பகுதியில் மீன் வளம் அதிகமாக இருப்பதால் அங்கு செல்லவே மீனவர்கள் விரும்புகின்றனர். அங்கு செல்லும் போது சில சமயங்களில் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளுக்குள் சென்றுவிடுகின்றனர். அங்கு நடக்கும் மோதலிலும் சிக்கிக் கொள்கின்றனர் என்றார் வான் ஹல்டர்ன்.

இந்திய-இலங்கை கடற்பரப்பில் இரு கப்பற்படைகளுக்கிடையே கூட்டு ரோந்து மேற்கொள்வதற்கான சாத்தியக் கூறு குறித்து பதிலளிக்க கமோடோர் வான் ஹால்டர்ன் கூட்டு ரோந்து என்பது இந்தப் பகுதியில் சாத்தியப்படும் என்று நான் நினைக்கவில்லை என்றார்.

நாங்கள் இங்கு எங்களது பகுதியில் ரோந்து மேற்கொள்கிறோம். கூட்டு ரோந்து என்றால் விடுதலைப்புலிகளுடன் நடைபெறும் சண்டையில் நாங்களும் சம்பந்தப்பட வேண்டியிருக்கும். இதை ஒரு நல்ல யோசனையாக நாம் கருதமுடியாது. கூட்டு ரோந்து என்றால் நாம் இலங்கைக் கடல் எல்லைக்குள் ரோந்து மேற்கொள்ள வேண்டியிருக்கும் அப்படிச் செய்யும் போது விடுதலைப்புலிகளை நேரடியாக சந்திக்க வேண்டும். இது ஏற்றுக்கொள்ளத்தக்க ஒன்றல்ல என்றார் இந்தியக் கடற்படையின் உயர் அதிகாரி.

இது குறித்து இறுதி முடிபு இந்திய அரசின் உயர் மட்டத்தில் எடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். இதேவேளை மீனவர்களை கடத்தல் செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்கிற குற்றச்சாட்டுக்களை மறுத்த இராமேஸ்வரம் மீனவர் சங்கத்தலைவர் தமிழக

## விபத்தையடுத்து தீப்பற்றியது...

கொழும்பு-காலி பிரதான வீதியில் நேற்றுக் காலை 6.15 மணியளவில் கொஸ்கொட என்ற பகுதியில் பயணிகளை ஏற்றிச் சென்ற இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸும் பியர் போத்தில்களை ஏற்றிச் சென்ற கெண்டைனரும் ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் சுமார் 25 பேர் உயிரிழந்துள்ளதுடன் 50 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்புக்கள் அதிகரிக்கலாமென வைத்தியசாலை வட்டாரங்கள்

இரு வாகனங்களும் மோதிக்கொண்டதை அடுத்து தீப்பற்றிக்கொண்டன. தீப்பற்றிய நிலையில் பஸ்ஸின் வாயில் பக்கம் நிலப்பக்கம் சரிந்து மூடிக்கொண்டது. இந் நிலையில் எவருமே தப்பிச் செல்ல முடியாத நிலை காணப்பட்டதாலேயே பலரது உயிர் பறிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பஸ்ஸில் தீ கொழுந்து விட்டு எரிந்ததால் உடனடியாக மீட்புப் பணிகள் மேற்கொள்ள முடியாமல் போனதாக கூறப்பட்டது. எனினும் தீயணைப்புப் பிரிவினரதும் மக்களின் உடனடி முயற்சியால் பலரது உயிர்கள் பாதுகாக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்திய-இலங்கை கடற்பரப்பில் இரு கப்பற்படைகளுக்கிடையே கூட்டு ரோந்து மேற்கொள்வதற்கான சாத்தியக் கூறு குறித்து பதிலளித்த கமோடோர் வான் ஹால்டர்ன் கூட்டு

என்றும் தெரிவித்தார். இதேவேளை மீனவர்களை கடத்தல் செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்கிற குற்றச்சாட்டுக்களை மறுத்த இராமேஸ்வரம் மீனவர் சங்கத்தலைவர் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பிற்குள் சென்று மீன் பிடிக்கிறார்கள் என்பதை அவர் ஒப்புக் கொண்டுள்ளார். (ச)

இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்புக்கள் அதிகரிக்கலாமென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பிலிருந்து காலி நோக்கிச் சென்றுகொண்டிருந்த கெண்டைனரும் உடுகமவில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான பஸ்ஸுமே ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டன.

உடனடியாக மீட்புப் பணிகள் மேற்கொள்ள முடியாமல் போனதாக கூறப்பட்டது. எனினும் தீயணைப்புப் பிரிவினரதும் மக்களினதும் உடனடி முயற்சியால் பலரது உயிர்கள் பாதுகாக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இவ் விபத்துச் சம்பவத்தில் எட்டுப் பெண்ளும் இரண்டு சிறுவர்களும் அடங்குகின்றனர். உயிரிழந்த 25 பேரில் ஏழுபேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை சார்க் நாடுகளின் கார்ப் பவனியையடுத்து தீப்பற்றிய பஸ் உடனடியாக அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டது. (ச-3)


## யாழ்/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

### வாழ்த்துகின்றோம்



செல்வரத்தினம்
நிவேதினி-10 A



சற்குணராசா
தனுசன்- 9A, C

க.பொ.த. சாதாரண தர பரீட்சைப் பெறுபேற்றின் மூலம் எமது கல்லூரித் தாயின் மகுடத்தில் வெற்றிப் பதக்கத்தை பதித்துள்ள செல்வரத்தினம் நிவேதினி, சற்குணராசா தனுசன் ஆகியோருடன் உயர் தர வகுப்புக்குத் தகுதி பெற்ற 65 மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நலன்புரிக் கழகம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

(C-700)



## புனித யாத்திரை தலமான
## புங்குடுதீவு அருள்மிகு அந்தோனி முனீந்திரர் ஆலய உயர் திருவிழா

கொடியேற்றம் :- 20.04.2007 வெள்ளி பி.ப.4.00 மணி
குரு:- சுவாமி ஆர்.பி.துரைரெத்தினம் அடிகள்
வேண்டுதல் கரு:- நோயாளிகள்.குழந்தைகளுக்கான நலவாழ்வு
திருப்பலி (பூஜை) பி.ப.5.00 மணி
நற்கருணை விழா:- (2-ம் திருவிழா) 21.04.2007 சனி பி.ப.4.30 மணி
வேண்டுதல் கரு:- இளம் தலைமுறையினரின் பாதுகாப்பான வாழ்வும் வளமும்
திருப்பலி (பூஜை) பி.ப.5.00 மணி
நற்கருணை பவனி-அருளாசி
உயர் திருவிழா:- 22.04.2007 ஞாயிறு காலை
வேண்டுதல் கரு:- நாட்டிற்கு நீதியான, நிலையான சமாதானம்
காலை 7.00 மணி இசை வேள்வி, கூட்டு வழிபாடு
காலை 8.00 மணி காணிக்கைப் பவனி
காலை 8.30 மணி திருவிழா திருப்பலி (பூஜை)
காலை 9.30 மணி நாதஸ்வரகான ஆராதனையுடன் அற்புதரான அந்தோனி முனீந்திரரின் ஊர் மனையூடான தேர்ப்பவனி
காலை 10.30 மணி பக்தர்களுக்கு அருளாசி
நண்பகல் 12.00 மணிக்கு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

பொது, தனிப்பட்ட கோரிக்கைகளுக்காக கூடி வழிபட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் காணிக்கை/நன்கொடையை 18.04.2007க்கு முன் பின்வரும் முகவரியில் வழங்கலாம்.
01. இறைதொண்டர்: திரு.வை.முத்துலிங்கம்-புங்குடுதீவு-2
02.அருள்தொண்டர்:திரு.அ.பொ.மகேந்திரன் இல.75, மேற்கு மார்கட்டு- யாழ்ப்பாணம்

நிர்வாகம்
புங்குடுதீவு. (820) அருள்மிகு அந்தோனியார் ஆலயம்




இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.04.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.